ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1784/14 - 2012 නොවැම්බර් 14 වැනි බදාදා - 2012.11.14
*1784/14 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

*2012 ஆம் ஆண்டின் 274 ஆம் இலக்கக் கட்டளை*

எனது குறிப்பு இல. : 4/3/9/2011/டபிள்யூஎஸ்/213.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : என்ஏஎல்/பிசெ/காணி/1740.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2012.10.24.*

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்: பிரதேச செயலாளர், நல்லூர்.

2. காணியின் விபரம் : வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/120, கோண்டாவில் தென்கிழக்கு சிறுபிரிவில், கோண்டாவில் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2012.04.05 ஆந் திகதிய வைஏ/என்எல்எல்/2012/64 ஆம் இலக்க முதற்சுவட்டு வரை படத்தில் துண்டு ''ஏ'' எனக் காட்டப்பட்ட சுமார் 0.1200 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

*01.* **துண்டு ''ஏ'' - யாழ்ப்பாண மாநகர சபைக் காணி - விஸ்தீரணம் : சுமார் 0.1200 ஹெக்டயார்**

வடக்கு : கோண்டாவிலிலிருந்து இருபாலை வரையிலான வீதி (வீ.அ.ச.); கிழக்கு மற்றும் தெற்கு : யாழ்ப்பாண மாநகர சபை திறந்த தரிசு நிலம்; மேற்கு : திருநெல்வேலியிலிருந்து நெடுஞ்சாலை வரையிலான வீதி (வீ.அ.ச.) மற்றும் பிரதேச சபை வீதி.

*11-1039*

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

*2012 ஆம் ஆண்டின் 275ஆம் இலக்கக் கட்டளை*

எனது குறிப்பு இல. : 4/3/9/2011/டபிள்யூஎஸ்/221.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : வே/பிர/காணி/138.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2012.10.24.*

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்: பிரதேச செயலாளர், வேலணை.

2. காணியின் விபரம் : வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/ 30, புங்குடுதீவு மத்திய மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், புங்குடுதீவு மேற்கு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2012.01.30ஆந் திகதிய வைஏ/வீஎல்என்/2012/05 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு "ஏ" எனக் காட்டப்பட்ட சுமார் 0.0911 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

01. **துண்டு "ஏ" - ஆழி எழுவன் கலடு - விஸ்தீரணம் : சுமார் 0.0911 ஹெக்டயார்**

வடக்கு : அடிப்பாதை, ரீ. சிவசாந்தினி உரிமை கோரும் காணி; கிழக்கு : ரீ. சிவசாந்தினியும் இலங்கை சர்வோதயமும் உரிமைகோரும் காணி; தெற்கு : இலங்கை சர்வோதயமும் எஸ். மஹேஷ்வரியும் உரிமை கோரும் காணி; மேற்கு : எஸ். மஹேஷ்வரியும் கே. எஸ். மஹேஷ்வரியும் உரிமை கோரும் காணி.

11-1040

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.